இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 157 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 04 – வெள்ளிக்கிழமை 17 ஜனவரி 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 157 : Thiruvalluvar Year - 2056 - Thai 04 - Friday 17 January 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.1.2025 அன்று திருவள்ளுவர் திருநாளையொட்டி சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த. வேலு, ஏ.எம்.வி. பிரபாகரராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.1.2025 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்படும் "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழாவை முழவு இசைத்து தொடங்கி வைத்தார். இந்த விழாவில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பொங்கல் திருநாளையொட்டி – தமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் வகையில்

# “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.17–**

**பொங்கல்திருநாளையொட்டிதமிழர்களின் பண்பாட்டுப் பெருமைகளை பறைசாற்றும் வகையில் “சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழா” கலை நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

**அதன் விவரம் வருமாறு :-**

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின்அவர்கள் 13.1.2025 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம்பெரியார்ஈ.வெ.ரா.நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத் திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் பல்வேறு வகையான கலை நிகழ்ச்சிகளுடன்கலைபண்பாட்டுத்துறையின் சார்பில் நடத்தப்படும் “சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா”வை தொடங்கிவைத்து, தமிழ்நாட்டின்புகழ் பெற்ற 250 கலைஞர்கள் இணைந்து நடத்திய மாபெரும் இசை, நடன நிகழ்ச்சிகளை பார்வையிட்டார்.

தமிழ்நாட்டின் கலை பாரம்பரியத்தைப் பறைசாற்றும்வகையில்இவ்வரசால் சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான ‘சென்னை சங்கமம் நம்மஊருதிருவிழா’கலைநிகழ்ச்சிகள், பெசன்ட்நகர் எலியட்ஸ்கடற்கரை, திருவான்மியூர்கடற்கரை, ராஜாஅண்ணாமலைபுரம், அரசுஇசைக்கல்லூரிவளாகம், திருவல்லிக்கேணி பாரத சாரண சாரணியர் திடல், கிண்டி கத்திபாரா சந்திப்பு, ஜாபர்கான்பேட்டை மாநகராட்சி விளையாட்டுத் திடல், தியாகராயநகர் நடேசன்பூங்கா, நுங்கம்பாக்கம்மாநகராட்சி விளையாட்டுத் திடல், எழும்பூர் அரசு அருங்காட்சியகம், கீழ்ப்பாக்கம் பெரியார் ஈ.வெ.ரா நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரநாதர் ஆலயத்திடல், ராயபுரம் ராபின்சன் பூங்கா, பெரம்பூர் முரசொலி மாறன் பூங்கா, அண்ணாநகர் கோபுரப் பூங்கா, கோயம்பேடு ஜெய்நகர்பூங்கா, கே.கே.நகர்சிவன்பூங்கா, வளசரவாக்கம் லேமேக் பள்ளி வளாகம், கொளத்தூர் மாநகராட்சி விளையாட்டுமைதானம், அம்பத்தூர்எஸ்.வி. விளையாட்டுத் திடல் ஆகிய 18 இடங்களில்14.1.2025முதல்17.1.2025வரை நான்கு நாட்கள் மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை நடைபெறுகிறது.

‘சென்னை சங்கமம்நம்ம ஊரு திருவிழாவில்’ தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டுள்ள1500க்கும்மேற்பட்டகலைஞர்கள்நையாண்டிமேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம், ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுபாட்டு, கணியன்கூத்து, தெருக்கூத்து, பாவைக்கூத்து, தோல்பாவைக்கூத்து, நாடகம், கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட 50க்கும்மேற்பட்டநாட்டுப்புறகலைநிகழ்ச்சிகள் நடத்தப்படும். இத்துடன் புகழ் பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், கேரளாவின் தைய்யம் நடனம், மகாராஷ்டிராவின்லாவணிநடனம், ராஜஸ்தான் கூமர்நடனம், மேற்கு வங்காளம் தனுச்சி நடனம், கோவாவின் விளக்கு நடனம், உத்ராகண்ட்டின் சபேலி நடனம்ஆகியஅயல்மாநிலகலைநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழாநிகழ்ச்சியைத்தொடர்ந்துகோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம்மற்றும்வேலூர்ஆகியஎட்டு நகரங்களிலும் இந்த ஆண்டு சங்கமம் நம்மஊருதிருவிழாகலைநிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது.

விழாநடைபெறும்இடங்களில்தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மக்கள் விரும்பிஉண்ணும்பலஉணவுவகைகளைக்கொண்டஅரங்குகள்அமைத்து உணவுத்திருவிழாவும், பூம்புகார் நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாட்டின் புகழ் பெற்ற கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்திவிற்பனைசெய்யும்அரங்குகளும்அமைக்கப்படஉள்ளன. தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டுக்களை விளையாடி மகிழும் வாய்ப்புகளையும் பார்வையாளர்களுக்கு வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விழாவில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம்மற்றும்மக்கள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர்மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறைஅமைச்சர்பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்றஉறுப்பினர்கள் திருமதி கனிமொழி, கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், மரு.நா.எழிலன், வி.ஜி.ராஜேந்திரன், த.வேலு, எம்.கே.மோகன், துணைமேயர்மு.மகேஷ்குமார், பெருநகரசென்னைமாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்துறைஅரசுமுதன்மைச்செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா. காந்தி உள்ளாட்சிஅமைப்புகளின்பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆளுநர் மாளிகையே! அடங்கு!

சட்டசபைக் கூட்டத்தில் ஆண்டின் தொடக்கத்தில் ஆளுநர் உரையாற்ற வேண்டும் என்பது மரபு. ஆளும் கட்சி, எழுதித் தரும் உரையை வாசிக்க வேண்டும் என்பதே நெறிமுறை. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் அனைத்து ஆளுநர்களும் இதனையே முறையாகக் கடைப்பிடித்து அரசியலமைப்புச் சட்டப்படி நடந்து கொள்கிறார்கள். ஆர்.என்.ரவியைப் போல் அழிச்சாட்டியம் செய்பவர்கள் ஒரு சிலரே!


**அரசியலமைப்புச் சட்டப்படி நடந்து கொள்ளாதவர் மட்டுமல்ல; சட்டத்தை மீறியே செயல்படுபவர் தமிழ்நாட்டுக்கு ஆளுநராக வந்துள்ளார். நாகலாந்தில் இருந்து விரட்டி விடப்பட்ட அல்லது பயந்து போய் ஓடிவந்து கிண்டியில் ஒளிந்து கொண்டுள்ளவர் இவர்.**

அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமாக பேசுவது, செயல்படுவதுதான் இவரது வழக்கம். ஆனால், ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை, தி.மு.க. அரசை ‘அரசியலமைப்புச் சட்டத்துக்கு விரோதமான தை’ப் போல திசை திருப்பும் வகையில் அமைந்துள்ளது.

**அரசியலமைப்புச் சட்டத்தை சிதைப்பதையே தொழிலாகக் கொண்ட பா.ஜ.க.வின் கூஜா தூக்கி ஒருவர், அரசியலமைப்பு சட்டத்துக்காக கண்ணீர் விடும் காட்சி போலித்தனமானது.**

அவை நடவடிக்கை தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதும், முடிந்ததும் தேசிய கீதம் பாடுவதும் 35 ஆண்டுகளாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் மரபாக இருக்கிறது. இதில் என்ன குறை கண்டார் ஆர்.என்.ரவி!

தேசியகீதம் பாடக்கூடாது என்று சொன்னோமா? இல்லை. தேசியகீதம் பாடப்படுகிறது. சட்டப்பேரவையில் மட்டுமா பாடப்படுகிறது? அனைத்து அரசு நிகழ்ச்சிகளிலும் பாடப்படுகிறது. முதலமைச்சர் உள்பட அனைவரும் தேசிய கீதத்துக்கு உரிய மரியாதை வழங்கித்தான் வருகிறார்கள். ரவிக்கு முன்னாலும் இது தான் நடைமுறை. ரவி போனாலும் இது தான் நடைமுறை. ஆனால் இவர் ஏதோ ‘தேசியத்தின் பிள்ளையாக’ நடிக்கிறார்! ‘மன்னிப்புக் கடிதம்’ கொடுத்து பிரிட்டிஷ் ஆட்சியிடம் கருணை காட்ட வேண்டி



நின்ற கூட்டத்தின் சந்ததியான ரவி, தேசிய கீதத்துக்காக உருகுவதை யார் நம்புவார்?

தேசிய கீதம் பாடச் சொன்னாராம், அரசியலமைப்பு சட்ட கடமையை இவர் செய்யச் சொன்னாராம், இதை ‘சிறுபிள்ளைத் தனமானது’ என்று முதலமைச்சர் சொன்னது குற்றமாம். பேச வந்து, பேசாமல் போனதைத்தான் ‘சிறுபிள்ளைத்தன மானது’ என்றார் முதலமைச்சர்.

**உரையை வாசிக்க நாள் குறித்து, கிண்டியில் இருந்து புறப்பட்டு வந்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு, அவைக்குள் வந்து, வாசிக்கப்போகும் நேரத்தில் வாசிக்காமல் திரும்பி ஓடுவது ‘சிறுபிள்ளைத்தனம்’ அல்லாமல் வேறு என்ன? தேசியகீதம் பாடச் சொல்வதை சிறுபிள்ளைத்தனம் என்று சொல்லவில்லை.**

அரசியலமைப்பு சட்ட அறிஞர்கள், மேதைகள், நீதியரசர்கள் நிறைந்த அவையில் போய் நின்று ரவி, தனது நடத்தையை விவரிக்கட்டும். அவர்கள் என்ன சொல்வார்கள்? இதையே ஆங்கிலத்தில் சொல்வார்கள்! ‘THE HINDU’ நாளிதழ் (7.1.2025) எழுதிய தலையங்கத்தை எடுத்து ஆர்.என். ரவி வாசிக்கட்டும். சிறுபிள்ளைத்தனமான சேஷ்டையை நூற்றைம்பது ஆண்டு பாரம்பரியம் கொண்ட ஆங்கில நாளிதழ் கண்டித்துள்ளதே. இந்தத் தலையங்கம் படித்தவர்கள் அனைவரும் ரவியை எந்த லிஸ்டில் சேர்ப்பார்கள்?

உடனே, முதலமைச்சர் மீது களங்கம் கற்பிக்கிறது ஆளுநர் மாளிகை. பாரதத்தை ஒரு தேசமாகவும், அதன் அரசியலமைப்பாகவும் ஏற்றுக் கொள்ளாதவர். முதலமைச்சர் என்கிறது அந்த அறிக்கை. அப்படி யாராவது சொன்னோமா? யார் தேசத் துரோகி என்பதும், தேசத்துரோக வரலாறு யாருக்குச் சொந்தம் என்பதும் நாட்டு மக்கள் அறிவார்கள். எங்களுக்கு தேசபக்தியை, ஆர்.என்.ரவியிடம் நாங்கள் கற்க வேண்டிய நிலைமையில் இல்லை.

**‘ஆணவம்’ என்கிறது ஆளுநர் மாளிகை. எது ஆணவம்? ஒரு ரிடையர்டு போலீஸ் ஆபீஸர், பா.ஜ.க.வின் கூஜா தூக்கியாக இருப்பதால், யாரோ ஒருவரின் தயவால் ஆளுநராகி வந்து தமிழ்நாட்டையும், தமிழையும், தமிழ்நாடு சட்டமன்றத்தையும், கோடிக்கணக்கான மக்களையும் கொச்சைப்படுத்தும் வகையில் தினந்தோறும் செயல்படுவது தான் ஆணவம் ஆகும். இங்கிருந்து துரத்தப்பட்டால் சீந்துவாரற்று ஏதோ ஒரு பங்களாவில் பதுங்கி வாழக் கூடிய மாஜி அதிகாரி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு இணையாக அல்லது அவரை விட மேலாக நினைத்துக் கொள்வது ஆணவத்தை விட தான்தோன்றித்தனம்.**

யார் கொடுத்த தைரியத்தில் இந்த ஆணவ ஆட்டத்தை ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து போடுகிறீர்?

வரலாற்றின் குப்பைத் தொட்டியில் இப்படி எத்தனையோ பேர் போய் விழுந்து கிடக்கிறார்கள்.

**தாய்த் தமிழ்நாட்டையும், இந்திய நாட்டின் அரசியலமைப்பையும் காக்க எங்களுக்குத் தெரியும். ஆளுநர் மாளிகையே அடங்கு! பிடிக்காவிட்டால் ஓடு!**